RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s-222912

OPEN ACCESS

# இலக்கியப் பெண்மையும் பாலின சமத்துவ நோக்கில் உளவியலும்

**அ. புஷ்பா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அவினாசி லிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம் கோயம்புத்தூர். 641043, தமிழ்நாடு, இந்தியா.

# Literary Feminism and Psychology towards Gender Equality

**A. Pushpa** [a, *]

[a] Department of Tamil, Avinashlingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore-641043, Tamil Nadu, India

* Corresponding Author: nivinareen@gmail.com

Received: 15-09-2022
Revised: 01-11-2022
Accepted: 09-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

The society denied women's place, rights, labor and even her existence. A woman's social participation is followed by her self-need and self-seeking being fulfilled even if she thinks and questions equally and not against men. In order to prevent this effort, variations were created in education, scriptures and arts training. In this society, women took the lead as a slave and as a second class human being. Literature, myths and religions were suppressed in the corner of the house in the kitchen. Even when she tried to fly with a small wing, he tied a rope called chastity and held the end of the rope in his hand and tried to pull it. This article's purpose is to tell the readers to create a better society where both the gender are treated equally and given equal knowledge.

**Keywords:** Feminism, Society, Chastity, Psychology

## முன்னுரை

காலந்தோறும் பெண்கள் கடந்து வந்த பாதை முட்களும் புதர்களும் நிறைந்த பாதை ஏன் கண்ணாடித் துகள்களும் கூட அவளது பாதங்களைப் பதம் பார்த்தன. வலிகள் அவளின் பாதங்களுக்கு மட்டுமல்ல மனங்களுக்கும் தான். தாயாய், சகோதரியாய், மனைவியாய் பல பரிமாணங்களில் சமூகத்தின் ஒட்டுமொத்த பெருமைகளையும் புகழையும் பெயரளவில் பெற்றுக் கொண்டு மனதளவில் வெளியில் கூறமுடியாத பல இன்னல்களை அனுபவித்துக் கொண்டு நடை போட்டுக் கொண்டிருக்கிறாள். பிரபஞ்சன் எழுதிய பெண் என்னும் இலக்கியப் படைப்பு ஆவணத்தை மையமாகக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது. பெண் எனும் பேராற்றலைப் பெட்டகத்திற்குள் அடைத்து, ஆபரணங்கள் பூட்டி, ஆசை வார்த்தை கூறி, விழித்தெழ முடியாமல் வைத்திருக்கும் சமூகம். மயக்கம் தெளிந்தால் அந்த அக்னி குஞ்சுகளின் தாக்கத்தால் நிலை தடுமாறிப் போக நேரிடும். கொற்றவையாய், காளியாய் அவதாரம் எடுக்கமாட்டாள் எதையும் தன் வயப்படுத்தும் உலகையே வாழவைக்கும் சூரியனாய் அவதரிப்பாள்.

## இயலாமையால் பூண்ட வேடம்

ஆண்களுக்கு எதார்த்தமாக கிடைத்த வாழ்க்கையையும் கல்வியையும் பெற காரைக்கால் அம்மையார், அவ்வையார், மணிமேகலை போன்ற பெண்கள் வயது முதிர்ந்த, பேயுரு கொண்ட, துறவு

பூண்ட நிலைக்குச் செல்ல வேண்டியிருந்தது. சமூகத்தில் பாதுகாப்பு உணர்வு இல்லாததும் அவச்சொற்களுக்கு பயம் கொண்டதும் இதற்கு காரணம் ஆண்களின் ஏமாற்றுப் போக்கினால் பாதிக்கப்படுபவள் பெண் மட்டுமே. "காதல், காசு வற்றியதால் வற்றுவதில்லை. மழை வற்ற, குளம் வற்றலாம் வறுமை வந்தால் மனம் வற்றுவதில்லை நான் வந்து விட்டேன்"

என்று கூறிய சந்தன நங்கையை கணிகையர் குலம் என்னும் காரணத்திற்காக நம்ப வைத்து ஆனந்தச் செட்டி கொலை செய்து விடுகிறான் (Prapanjan, 2016). சந்தன நங்கை இயலாமையால் சமூகத்தை எதிர்கொள்ள முடியாமல் பழையனூர் நீலியாக மாறி பேயாய் திரிந்து தன் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ள பழிவாங்குவதாக கதை கூறுகிறது. இது கதை அல்ல சமூகத்தின் பிரதிபலிப்பு மாமியார் மருமகள் சண்டை, வரதட்சனை கொடுமை, பெண் சிசுக்கொலை, உடன்கட்டை ஏறுதல் இவையும் கதைகள் அல்ல நம் சமூகம் சந்தித்த பிரச்சனைகள் அனைத்தும் பெண்களின் வலியும் வேதனையும் உள்ளப் போராட்டமும் நிறைந்த வாழ்க்கை. பெண் இன்றி ஆணால் தனித்து இயங்குவது ஒரு கை ஓசை போல இயற்கைக்கு மாறானது பாரதி அதனால் தான்

"கற்பு நிலை என்று சொல்ல வந்தால்

இரு கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்" (Bharathiar, 2019) என்றான்.

## பகுத்தறியும் பக்குவம் இன்மை

கணவனின் அனைத்து ஆணைகளுக்கும் தேவைகளுக்கும் கட்டுப்பட்டு அதனை பூர்த்தி செய்வதே பெண்ணின் தலையாயக் கடமை. ஓரறிவு உடைய தாவர வகையில் ஒட்டுண்ணி என்றால் தனது உறைவிடம் உணவு இவற்றிற்காக பிற உயிரினங்களை சார்ந்து வாழ்பவை. சாறுண்ணியோ தனது உணவுக்காக பிற உயிரினங்களைச் சார்ந்து வாழ்பவை என்றும் கூறுவர். இவை இரண்டும் இன்றி உயிரினை, மானத்தை தக்க வைத்துக் கொள்ள பிறரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஆறறிவுடைய பெண் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாள். ஆரண்யத்தில் வசிக்கும் முனிவருக்குப் பத்தினியாக வாழ்வது பெரிய பேரு கணவன் இருக்கும் இடமே சொர்க்கம் என அனுப்பி வைக்கப்பட்டவள் நளாயினி. இலக்கியங்கள் மணவாளனே மங்கையின் பாக்கியம் என்று கூறுகிறது. அனுபவிப்பவளோ "எத்தனை பெரிய பொய் காடு, மேடு, கல், மண் என்று அலைந்த என் கால்கள் புண்பட்டன. அவனுக்காகவும் எனக்கும் உணவு தேடித் தேடி நான் மிகவும் களைத்துப் போனேன். காட்டுக்குள் இருந்து கொண்டு தவம் செய்கிறேன் என்று வாழ்பவர்கள் வாழ்கிற ரிஷிகள் அனேகமாக அயோக்கியர்கள். பெண்களின் உழைப்பில் வாழ்ந்து சுகிக்கிற சோம்பேறி" என்று நளாயினி மனம் கூறுவதாக அவளின் உள்ள குமுறலைக் கூறுகிறார் பிரபஞ்சன் (Prapanjan, 2016).

நளாயினி தன்னுடைய கணவன் பரத்தையர் சேரிக்கு செல்ல விரும்பியதால் தானே அழைத்துக் கொண்டு பரத்தையின் இல்லத்தில் இடம் கேட்டாள் அக்கால சமூகம் அப்படி இருந்தது என்பதை மறுக்கவில்லை மறைக்கவும் இல்லை. ஆனால் தற்கால இளைய சமூகம் இதனை முன்மாதிரியாக கொண்டு நளாயினியைப் போல் இருக்க வேண்டாமா! சாவித்திரி போல கணவனுக்காக எமனிடம் போராட வேண்டாமா! கணவனுக்கு ஒரு தீங்கெனில் கண்ணகி மதுரையை எரித்தது போன்று பொங்கி எழ வேண்டாமா என்ற சொற்பிரயோகம் சிந்திக்க வேண்டிய ஒன்றாக உள்ளது. இனம் புரியாத வயதில் (நளாயினி) பெண்ணிடம் அனுமதி கேட்பதால் பால் இணை விருப்பம் காரணமாக தவறான முடிவு எடுக்க வாய்ப்புள்ளது. வயது வந்த பின் அவளுக்கு உரிமை கொடுக்காமல் ஆணையிடுவதும் குடும்பச் சூழலை காரணம் காட்டுவதும் சூழ்நிலை கைதியாக்கி விடுகிறது. பெண்களின் பல நேர முடிவுகள் இவ்வாறு அமைவதால் அவளுக்கான உணர்வுகள் மாண்டு விடுகின்றன.

## யாகத்தீயில் ஆகுதியாகும் பெண்ணின் உணர்வுகள்

மனிதனின் மனதில் சந்தேகம் எழுந்தால் காணும் அனைத்திலும் அதுவே பிரதிபலிக்கும். எண்ணங்களிலும் செயல்களிலும் மனப்பிறழ்வை உருவாக்கும்.

"என் சோழ மன்னன் காவிரியை ஏற்கனவே மணந்து கொண்டான் இப்போது வடநாட்டுக்குச் சென்று கங்கையையும் மணந்தான் ஆதலால் காவிரியே உனக்கு ஏன் கோபம் வரவில்லை"

என்று மாதவி சோழனின் வெற்றி சிறப்பைப் பாட கோவலனுக்குக் கோபம் வந்தது (Prapanjan, 2016). தன்னை விடவும் மன்னனும் உனக்கு வேண்டுமோ என்று உடனே கண்ணகியை நாடி செல்கின்றான். அவனையே நம்பி இருந்த கண்ணகியை மாதவிக்காக விட்டு வந்தவன் இன்று மாதவி கணிகையர் குலம், கேட்பார் யாரும் இல்லை என்ற எண்ணத்தோடு விட்டுச் செல்கின்றான். இரு பெண்களின் மனநிலையையும் ஆராய்ந்தால் இயலாமையே முன் நிற்கின்றது.

"உதயகுமாரனை நான்தான் முதலில் கொன்றேன் சுதமதி. என்னை என் அம்மா உதயகுமாரனுக்கு முன்னாலே கொன்று விட்டாளே மனிதர்கள் மனிதர்களைக் கொன்று கொண்டே இருக்கிறார்கள்."

என்று மணிமேகலை கூறுகிறாள் (Prapanjan, 2016). உயிரைக் கொல்வது மட்டும் கொலையல்ல உணர்வுகளைக் கொல்வதும் கொலையே மாதவியின் ஏமாற்றமும் துறவறம் பூண்ட செயலும் மணிமேகலையை அவள் அனுமதியின்றி துறவறம் பூண எத்தனித்ததும் யாக நெருப்பில் பொருள்களுக்குப் பதிலாக மனங்களின் உணர்வுகளை ஆகுதியாக்கியதற்கு சமமே.

## அத்திப்பழ பூச்சியும் பொருளற்ற வாழ்க்கையும்

ஒரு உயிரினை மகிழ்விக்க, சாந்தப்படுத்த பிற உயிரினங்களை வதைப்பது தீர்வாகாது. இயற்பகையாரின் மனைவி மணக்குல மடந்தையை சிவனடியார் ஒருவருக்கு தானமாகக் கொடுத்தார். நான் தங்களுக்குச் சொந்தமான பொருள் என்பதை மறக்கவில்லை. சுவாமி எனினும் மாடுகளையும், ஆடுகளையும் போல மனுஷி ஒரு பொருள் ஆவாளா?" என மணக்குலமடந்தை கேட்கிறாள் (Prapanjan, 2016). வாழ்வின் குறிக்கோளாக எதைக் கேட்டாலும் கொடுப்பதையே உறுதிமொழியாக எடுத்துள்ளேன் என்று இயற்பகை கூறுகிறார். இதே தவற்றை தான் பஞ்சபாண்டவரில் தர்மன் பாஞ்சாலியை சூதாக வைத்து விளையாடினான். அத்திப்பழம் பூச்சி கூட அத்திப்பழத்தினுள் புகுந்து இயற்கையின் நியதிப்படி மறுசுழற்சிக்கு தன் உயிரைக் கொடுத்து பல உயிரினைப் பெருக்கி சென்றது அதில் ஒரு அர்த்தம் இருந்தது. பூச்சி இனங்களை விட பெண்ணினம் தாழ்வாக, பயனற்றதாக கருதப்பட்டுள்ளமை தெளிவாகின்றது.

## தலைவியும் பரத்தையும் ஓரினம்

பெண்ணின் அனுமதியின்றி பெண்ணை அடிமை கொள்ளும் உரிமை ஆணுக்கு இருந்த காலகட்டம் என்பதால் கணிகையர் குல பெண்கள் கூட தங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள பல பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

பரத்தையர் வாழ்க்கை அன்று தொட்டு இன்று வரை வேதனையும் வலியும் நிறைந்ததாகவே உள்ளது. விருப்பத்தின் பெயரிலோ சூழ்நிலையின் காரணமாகவோ இந்நிலைக்கு அவர்கள் தள்ளப்படுகிறார்கள் அதனால் பல போராட்டங்களையும் சந்திக்கின்றனர்.

"ஒரு குளத்தில் இருமலர்கள் தாமரை ஒன்று குவளை மற்றொன்று தலைவன் தோளுக்கு தாமரைச் சென்றது எருமை வந்தது குவளையை மென்றது மலர்களின் வேற்றுமை மனிதர் விதித்தது மங்கையின் இதயமோ நெருப்பாய் தகித்தது"

என்று மாயாவின் மனக்குமுறலை பாணன் பாடுவதாக அமைகிறது (Prapanjan, 2016). மேலும் தன் தாய் அன்று இறைவனிடம் அழுது வேண்டியது நினைவுக்கு வந்தது அதன் அர்த்தம் இன்று தான் புரிந்தது.

"இந்த பிறவி இழி பிறவி

என்றொழியும் இந்திரரே

என்னை விற்றபின் எனக்கேது மிச்சம் மாந்தருக்கோ நான் துச்சம்

போதும் இந்த ஜென்மம்- பெண் ஜென்மம்

ஏதும் செய்ய இயலாத பரத்தை ஜென்மம்"

என்று கண்ணீரோடு நின்ற அம்மாவின் நிலையை மாயா இப்பொழுதுதான் புரிந்து கொண்டாள்.

தன் மனைவியும் குழந்தையும் கண்ணீரோடு இருக்கின்றனர் என்று தலைவன் செல்லுகையில் மாயா மறுப் பேதும் கூற முடியாத நிலையில் தங்களின் மகளுக்கு இந்த அன்பளிப்பைக் கொடுங்கள் என்று பட்டாடையைக் கொடுக்க, செல்லும் வழியிலேயே

"இந்த பரத்தை தொட்ட சட்டையை என் மகள் அணிவதாவது"

என்று தலைவன் வெளியே எறிந்து விடுகின்றான் என்னும் பொழுது ஒரு ஆடையை கூட தனக்கு உடைமையாக்க விரும்பாத தலைவன் தரம் தாழ்ந்த நிலையிலும் தலைவியாகிய அவன் மனைவி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலையில் நோக்கும் பொழுது தலைவி, பரத்தை இரு பெண்களின் நிலைப்பாடுகளிலும் ஏமாற்றங்கள், அவமதிப்புகள் நிகழ்கின்ற நிலையை காண முடிகின்றது (Prapanjan, 2016).

## மறுசுழற்சி இயந்திரம் பெண்

கணவன் வாரிசு இல்லாமல் இறந்தால் கணவனின் சகோதரனின் உதவியோடு வாரிசு உருவாக்கிக் கொள்ளலாம். சகோதரன் இல்லையெனில் முனிவர்களின் வழி குழந்தை பெற்றுக் கொள்ளலாம். மகாபாரதத்தில் சத்தியவதி தன் மகன் விசித்திர வீரியன் இறந்தவுடன் வியாசரை அனுப்பி தன் அரண்மனை வாரிசுகளை உருவாக்கியதாக, அதற்கு பீஷ்மனும் உடந்தையாக இருந்தார் என்று அம்பையிடம் சகோதரிகளான அம்பிகை அம்பாலிகை கூறுகின்றனர். பாதிக்கப்பட்ட அம்பையும் நீதி கேட்கும் பொழுதும்

"குளம் வெட்டுகிறவனுக்கு மண்புழுக்கள் சாவதை பற்றி அக்கறை இருக்க முடியாது"

என்று அம்பை தன் நிலையை எண்ணி வருந்துகின்ற நிலையில் நெருப்புக்குள் நிற்பவளை போல ஒரு உயிரியாக கூட கருதாத பீஷ்மனை வெறுக்கின்றாள் (Prapanjan, 2016).

சீதையை ராமனிடத்தில் இருந்து மீட்ட பிறகு ராமன் சீதையின் மீது சந்தேகிக்கவில்லை மக்கள் சந்தேகிக்கிறார்கள் என்று கூறும் பொழுதும் சீதை என்னும் பெண்ணின் மனநிலை அவனையே எண்ணி அசோகவனத்தில் துயரடைந்த பெண்ணின் உள்ள குமுறலை ஆண்வர்க்கம் பொருட்படுத்தவே இல்லை. நாடாளு மன்னனும் சாதாரண குடியானவனும் தன்னில் சரி பாதியாக பெண்ணை (மதிக்கவில்லை) எண்ணவில்லை என்பதே நிதர்சனமான உண்மை.

## அந்தப்புர மகளிரின் அவல நிலை

கோட்டை காவலன் மாதவன் அறுபத்து மூன்று அம்புகளை உடலில் தாங்கி உயிர் விட்டான் அவன் மனைவி பிரவாகினி அவனை அனைத்து அழுததை கண்ட சுகந்தி நாட்டு சிற்றரசன் சூரியமுகி மாதவனின் மனைவி இந்த நாட்டின் பேரழகிகளில் ஒருத்தி என்று கூற, அடுத்த கனமே அவள் அரண்மனை அந்தப்புரத்தில் இருந்தாள். பெண்ணே இந்த தாம்பூலத்தை புசி என்று தாதிப் பெண் கொடுக்க மயக்கத்திலேயே அலங்காரம் அனைத்தும் நடந்துவிட அரசன், அமைச்சன், சேனாதிபதி, படைத்தலைவன், புரோகிதன் என்று தொடர்ந்தது. இந்த தேசத்தில் நீதி நியாயம் பண்பு எதுவும் இல்லையா என்றதற்கு கிடைத்த பதில் "உங்கள் தேசத்தில் போரில் தோற்ற வீரர்களின் பெண்களை என்ன செய்தீர்கள்? நினைத்துப் பார் தாசி வர்க்கம் இப்படித்தானே தோன்றியது." (Prapanjan, 2016) பிரவாகினி நம் சொந்த நாட்டிலும் பெண்களின் நிலை இதுதானே என்று எண்ணிக் கொள்கிறாள்.

## அக்னியில் அடைக்கலமாகும் மகளிர்

சிற்றரசர்கள் பிறப்பேரரசுகளிடம் இருந்து தப்பிக்க பேரரசர்களின் நட்பும் ஆதரவும் தேவையாக இருந்தது அதனால் தங்களுடைய பெண்களை பேரரசருக்கு திருமணம் செய்து கொடுக்க தயாராக இருந்தார்கள். மறுத்தால் போருக்கு தயாராக இருக்க வேண்டிய சூழ்நிலை

"வெம் முரணான் மகள் வேண்ட

அம் மதிலோன் மறுத்து உரைத்தன்று" (Puliyur Kesigan, 1998)

உழிஞை அரசன் நொச்சி அரசனிடத்தில் மகளை மணம் முடித்து தர கேட்க அவன் நிராகரிக்கின்றான் இதனால் போர் தொடங்குகிறது இது காலங்காலமாக நிகழ்கின்ற ஒரு நிகழ்வாக இருந்துள்ளது. பேரரசர் குலத்தைச் சேர்ந்த பெண்தான் பட்டத்தரசியாக இருக்க முடியும் சிற்றரசர்களுடைய பெண்கள் அந்தப்புரத்தை அலங்கரிக்க முடியும் அரசனுக்கு பயனுள்ளவளாக இருக்க முடியும்.

ஏழு குறுநில அரசர்களின் பெண்களையும் பேரரசர் மணக்கிறார் அவர்களில் இளவரசி சந்திரபிரபாவும் அடங்குவார் என்று தன் மனைவியிடத்தில் சந்திர பிரபாவின் தந்தை கூறுகிறார்." நம் பேரரசர் ஒழுக்கம் உள்ளவர் அவர் தந்தை ஐம்பத்து எட்டு பெண்கள் வைத்திருந்தார் நம் இளையவர் எத்தனை உயர்ந்தவர் கவலையை விடு ஏழு பேரில் ஒரு மனைவியாக வாழும் பாக்கியம்" என்று சந்திர பிரபாவின் தந்தை கூறுவதன் வழி பெண் பெண்ணாகவே மதிக்கப்படவில்லை என்பது விளங்குகிறது (Prapanjan, 2016).

சந்திர பிரபா அரசனின் முகம் காணாமலேயே அந்தப்புரத்தில் அலங்காரம் செய்து கொண்டு பல நாட்கள் காத்திருக்கிறாள். திடீரென்று போரில் அரசன் இறந்து விடுகின்றான் அரசனோடு சேர்த்து ஐந்து பெண்களை உடன்கட்டை என்னும் சதியில் ஏற்ற தயாராகின்றார்கள். மாமன்னனின் இடப்பக்கம் அரசியையும் வலது பக்கம் சந்திரபிரபாவையும் இன்னும் மூவர் காலின் அடியிலும் படுத்தார்கள் அவர்களின் கைகள் மன்னனின் கைகளோடு சேர்த்து கட்டப்பட்டன பெண்கள் ஓ என்று அலறினார்கள் அந்த அலறலை காட்டிலும் அதிகமாக புரோகிதர்களின் வேத கோஷம் இருந்தது"

தன் கணவன் யார் என்று தெரியாமலேயே சிதையில் எரியும் அவல நிலையை பெண்ணே அனுபவித்துள்ளாள் எத்தனை வலிகள் நிறைந்த வாழ்க்கையைக் கடந்து வந்துள்ளாள் (Prapanjan, 2016).

## இலக்கியம் உணர்த்தும் தோழியின் இருப்பு

செல்வந்தனின் மகளாகப் பிறந்தால் அவள் தான் தலைவி. ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து அவர்களின் வீட்டு காரியங்களைக் கவனிக்கிற பொறுப்பில் இருந்தால் செவிலித்தாய், அவளின் மகளாக பிறந்ததால் தலைவியின் தோழி என்னும் பொறுப்பு. தலைவியின் காதல், தலைவனை பிரிந்து இருந்தால் அவளை ஆற்றுவித்தல், தலைவனோடு சேர்த்து வைத்தல் என்று வாழ்நாளே அவளை சார்ந்ததாகவே அமைந்து விடுகின்றது. "வெட்கம், நாணம், கூச்சம் போல் அடிப்படை மனித உணர்வுகள் கூட மேல்தட்டுக்கும் கீழ்த்தட்டுக்கும் வித்தியாசப்படுகிறதா? ஏழையாகப் பிறந்தேன் என்பதாலேயே எனக்கு மனித உணர்வுகள் இல்லாமல் போய்விடுமா?" (Prapanjan, 2016).

என்று தோழியே எண்ணுவதாக குறிப்பிடப்படுவது சிந்திக்கத் தக்கது. உயர்மட்ட மக்களே வாழ்வதற்குத் தகுதியானவர்கள் என்னும் விதத்தில் இலக்கியங்களில் தோழியின் இருப்பு கீழ் மட்டத்தில் ஏழ்மையில் இருக்கும் பல பெண்களின் இருப்பினை வெளிப்படுத்துவதாக உள்ளது.

## மேலாடை போராட்டமும் புதிய அத்தியாயமும்

பெண்கள் மேல் சட்டை அணிய பல இன்னல்களை எதிர்கொள்ள வேண்டியது இருந்தது "திருவிதாங்கூர் சமஸ்தானத்துச் சட்டம் அது, குமரி முதல் இந்த பகுதிக்கு அவங்க தான் ராசா அவங்க சட்டப்படி மேல் சாதிக்காரர்கள் வீட்டுப் பெண்கள் தான் மார்பை மூடலாம்" என்று இசக்கியம்மாள்

எலிசபெத்தம்மாள் ஆன நிலை பெண்ணின் தேவையை அன்றைய காலகட்டத்தில் பூர்த்தி செய்வதாக அமைந்திருந்தது (Prapanjan, 2016). ஆனாலும் இதை ஏற்றுக் கொள்ள முடியாமல் ஏளனமாக பேசிய மேல்தட்டு ஆண்களுக்கு பதில் அளிக்கிறாள் இசக்கியம்மாள், "எங்களை தொட்டாலே பாவம் பார்த்தாலே பாவம்னு சொன்னியே இப்ப நாங்க எங்க மதத்தை மாத்திக்கிட்டதாலே உனக்கு என்னடா போச்சு நாங்க இந்துன்னு என்னைக்கடா நீங்க ஒத்துக்கினிவ எங்களை ஒத்துக்காத மதத்தை நாங்க ஒத்துக்கலை வழியை விடடா" என்று புதிய அத்தியாயத்தின் தொடக்கமாக மேலாடை போராட்டம் அமைந்தது. கிறிஸ்தவ சமயம் காலூன்ற மக்களின் பரிதாப நிலையும் அடக்கு முறையும் ஏற்றத்தாழ்வும் காரணமாக அமைந்துள்ளது.

## சமத்துவத்தை நோக்கிய புரிந்துணர்வும் கல்வியறிவும்

திருமணத்திற்குப் பிறகு பெண்கள் கல்வி கற்பது என்பது வெளிப்பார்வைக்கு எளிமையானதாக தோன்றலாம். ஆனால், அவள் எதிர்கொள்ளும் இன்னல்கள் ஏராளம். கல்விக்கு அதிபதி சரஸ்வதி அல்ல பெண்களின் கணவன்மார்கள். கணவன் முனைவர் பட்டம் பெற சாரதா போராடுகிறாள். இரவில் பால் கொண்டு சென்றாள், எவ்வளவு நேரம் ஆனாலும் கையில்தான் கொடுக்க வேண்டும், பத்தரை மணிக்கு தேநீர் கொண்டுவர மறந்து விடக்கூடாது என்று ஆணை வேறு, அதிகாலை எழுப்பி விட அவள் அவனுக்கு முன்பே எழுந்திருக்க வேண்டும். சாரதாவுக்கு எம்.ஏ பயில ஆசை அதனால் தொலைத்தொடர்பில் பயின்றாள் விளக்கை அணை எனக்கு தூக்கம் வருது எம்.ஏ இல்லாமல் தான் கொறைஞ்சு போச்சாக்கும் என்றான் கணவன். "அரைமணிக்கு பிறகு சங்கரா உறங்கிப் போனான் அவள் அமைதியாக எழுந்து மாடிப்படி விளக்கை போட்டுக் கொண்டு அந்த வெளிச்சத்தில் படிக்கத் தொடங்கினாள்" மேலும், "ஒரு முடிவு பண்ணிக்கோ என் மனைவியா இருக்கணும்னா வேலையை விட்டுரு என் சொத்து நமக்கு போதும்" என்பன போன்ற படிநிலைகளில் சாரதா பாதிக்கப்பட்டாள். கணவன் அல்லது அவள் ஆசைப்பட்ட வேலை இதில் ஒன்றை மட்டுமே தேர்ந்தெடுக்க அவளுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. இது போன்ற சூழ்நிலைகளால் பெண்கள் பல நேரங்களில் குடும்பம் சிதைந்து விடுதல் கூடாது என்ற முடிவையே எடுக்க முன் வருகின்றனர் (Prapanjan, 2016).

## முடிவுரை

“பெண்ணின்றி ஆணால் தனித்து இயங்க இயலாது ஆண் பெண் ஏற்றத்தாழ்வை இறைவன் வகுக்கவில்லை மனிதன் தன் சுய தேவைகளுக்காக வரையறுத்துக் கொண்டான். “காலந்தோறும் பெண் பல நிலைகளில் பல வலிகளைக் கடந்து வந்துள்ளாள் அது இயற்கை தந்த வலி அல்ல தன்னை போல இன்னொரு இனமாகக் கருதப்படும் ஆண் இனம் தந்த வலி. பகுத்தறியும் அறிவு இருந்தும் சுய தேடலுக்காகவும் சுயநலத்துக்காகவும் ஆண்வர்க்கம் தன் ஆளுமையை பெண்ணின் மீது செலுத்தி பல வன்முறைகளை செய்துள்ளது. அத்திப்பழ பூச்சை போல் மறுசுழற்சி மட்டும் பெண்ணின் பணியாக இருந்தால் ஆணுக்கும் அதே பணி தான் இருந்திருக்க வேண்டும். ஆணுக்கு ஒரு நியதி இருக்கையில் பெண்ணை வலிமையற்றவர்களாக உதாசீனப்படுத்துவது நியதியாகாது. சாதாரண குடிமகன் முதல் நாடாளும் அரசன் வரை பெண்ணை வலிமை குன்றியவளாக அழகு பதுமையாக ஆசை தேடலுக்கான வடிகாலாக நோக்கினார்களே தவிர ஒரு பொருட்டாக கூட ஏற்றுக்கொள்ளவில்லை. பெண்களுக்கு திருமணம் முக்கியம் தான் என்றாலும் தன்மானம் அதைவிட முக்கியம். ஒழுக்கம் அவசியம்தான் அதனை விடவும் சுய கௌரவம் அத்தியாவசியமானது. கல்வி, உழைப்பு, முயற்சி, போராட்டம் இதுதான் பெண் சுதந்திரமாக வாழ வழிவகுக்கும் அதுதான் பெண் உலகம் உய்வு பெற சமூகத்தை மேன்மையுறசெய்ய உன்னத வழியாகும். உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற ஏற்றத்தாழ்வு இன்றி எல்லோரும் இறைவனால் படைக்கப்பட்டவர்கள் அத்தனை உயிரினத்திற்கும் பூமியில் வாழ உரிமை உள்ளது என்பதை உணர்ந்து பகுத்தறிவு உள்ள மனிதனாக பயணிப்பதே இதற்கானத் தீர்வாக அமைய முடியும்.

## References

Bharathiar, (2019) Bharathiar Kavithigal, Thirumagal Nilayam, Visa Pathipagam, Chennai, India

Prapanjan, (2016) Pen, Discovery Book Palace, Chennai, India

Puliyur Kesigan, (1998) Puraporul Venbamalai, Pari Nilayam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License